# எண்கணிதம் – குழந்தைகள் பெயர்ப் பட்டியல்

ஒருவரது பிறந்த தேதிக்கு ஏற்ற அதிர்ஷ்ட எண்ணில் பெயரின் கூட்டு எண்ணை அமைப்பதே எண்கணிதத்தின் அடிப்படைத் தத்துவமாகும். உதாரணமாக ஒருவர் 14.07.1965 ல் பிறந்தார் எனில்,

அவரது பிறவி எண் 5 ஆகும். (14 = 1+4 = 5). அவரது விதி எண் 6 ஆகும். (1+4+7+1+9+6+5 = 33 = 3+3 = 6).

ஒவ்வோர் எழுத்தாகக் கூட்டிக் கொண்டே வந்து, இறுதியில் வரும் விடையைத்தான் பெயரின் கூட்டு எண் என்கிறோம்.. ஒவ்வோர் ஆங்கில எழுத்துக்கும் ஓர் எண் இருக்கிறது. அது கீழ்க்கண்டவாறு அமைந்திருக்கும்.

A - 1, B - 2, C - 3, D - 4, E - 5, F - 8, G - 3, H - 5, I - 1, J - 1, K - 2, L - 3, M - 4, N - 5, O - 7, P - 8, Q - 1, R - 2, S - 3, T - 4, U - 6, V - 6, W - 6, X - 5, Y - 1, Z - 7.

உதாரணமாக, E. விஜய் என்ற பெயரின் எண்கணிதத்தைப் பார்ப்போம்.

E. VIJAY = 5+6+1+1+1+1 = 15.

எனவே, விஜய் என்பவரின் பெயர் கூட்டு எண் 15 ஆகும். இதில் மிக முக்கியமாக இன்ஷியலையும் சேர்த்துக் கணக்கிடுவதே முழுமையான எண்கணிதமாகும்.

ஜோதிட சாஸ்திரத்தில் 27 நட்சத்திரங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் அதற்கிசைவான அதிர்வெண் கொண்ட எழுத்துக்கள் இருக்கின்றன. எனவே ஒரு குழந்தை எந்த நட்சத்திரத்தில் பிறக்கிறதோ, அந்த நட்சத்திற்கான ஆரம்ப எழுத்துக்களுடன் கூடிய விதவிதமான பெயர்களே குழந்தைகளுக்கான பெயர்ப் பட்டியல் என்று அழைக்கப்படுகிறது.

# பிரமிட் முறை எண்கணிதம்

**உதாரணம் : J. ஆதித்யா (J.ATHITHYAA)**

JATHITHYAA

1145145111

259659622

75625684

3287253

516978

67676

4444

888

77

5

பெயர் எண் = 24, பிரமிட் எண் = 5 (77).

இவ்வாறு ஒரு பெயருக்குக் கூட்டு எண்ணும், பிரமிட் எண்ணும் அதிர்ஷ்ட எண்ணில் அமைந்தால் அது சிறப்பான பலன்களைத் தரும். அடுத்ததாக, பெயரியல் எண்கணிதம் (Pronology) என்னும் முறையும் இதில் உள்ளது. அதாவது பெயருக்குள் Di, Dhi, Nil, Kill, ill, No, War, ... etc., ... ஆகிய எதிர்மறைச் சொற்கள் வரும் போது அது பாதிப்பைத் தரும். இந்த பாதிப்பிலிருந்து காப்பாற்றும் ஆபத்பாண்டவனாக பிரமிட் எண் விளங்குகிறது.

எனவே, எண்கணிதத்தில் எந்தெந்த எண்கள் அதிர்ஷ்டமானவை, ஆகாதவை, பிரமிட் முறையின் சூட்சுமம் – ஆகியவை பற்றித் தெளிவாகத் தெரிந்திருந்தால் மட்டுமே ஒரு பெயரை முழுமையான அதிர்ஷ்டம் கொண்டதாக அமைக்க முடியும்.

**குறிப்பு :** நாங்கள் இதற்காகச் சொந்தமாக மென்பொருளை (Software) உருவாக்கி தற்காலத்திற்கு உகந்த நவீனப் பெயர்ப் பட்டியலை பிரமிட் முறையில் வெளியிடுகிறோம். மேலும், குழந்தைகளுக்கு ஜாதகத்தின் அடிப்படையில் கிரகநிலை ஆய்வு செய்து நாங்களே அதிர்ஷ்டமான பெயர்களை அமைத்துத் தருகிறோம். நிறுவனங்களுக்கும் அதிர்ஷ்ட எண்ணில் பெயர்களை உருவாக்கித் தருகிறோம். இந்தத் துறையில் எங்களுக்கு **20** ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் இருக்கிறது.

---